(3) உடுக்குறியிட்ட வினுக்களுக்கு உடுக்குறியிடப்படாத வினுக்களாக விடைகள்.

MR. CHAIRMAN : I have also announce to the House that twenty-one answers to starred questions, which have been received from the Government, are laid on the Table of the House to-day as Unstarred Question Nos. 30 to 50.

5. கவன ஈர்ப்பு.

மதுரை, திருநெல்வேலி, சென்னை ஆகிய இடங்களில் கல்லூரிகள் காலவரையறையின்றி மூடிக்கிடப்பது குறித்து.

திரு. எஸ். வெள்ளப்பாண்டியன் : தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த விஷயம் பற்றி, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். மதுரை, திருநெல்வேலி, சென்னை ஆகிய இடங்களில் கல்லூரிகள் காலவரையறையின்றி மூடிக் கிடக்கின்றன. மேலும் மாணவர்களுடைய கிளர்ச்சி தொடர்ந்து இருந்து வருகிறது. இதுபற்றி அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, 1972-73 கல்வி ஆண்டின் துவக்கத்தில் சென்னை, மதுரை, திருநெல்வேலி மாவட்டங்களில் உள்ள கீழ்க்கண்ட கல்லூரிகளிலிருந்து மாணவர் கிளர்ச்சிகள் பற்றிய தகவல்கள் வந்தன. இவற்றால் கல்வி போதனையில் தற்காலிக தடங்கல் ஏற்பட்டதுடன், சில இடங்களில் கல்லூரியை மூடி வைக்கவும் நேர்ந்தது.

1. சென்னை நகரம் :—

சட்டக் கல்லூரி, சென்னை 2—8—1972 அன்று மாணவர்களில் 75 சதவிதம் பேர் உதவித் தொகை அளித்தல், மின் விசிறி பொருத்துதல் போன்ற கோரிக்கைகளுக்காக அடையாள படிப்பு நிறுத்தம் செய்தனர். இக்கோரிக்கைகள் ஏற்கெனவே பரிசீலனையில் உள்ளன.

2. திருநெல்வேலி மாவட்டம் :—

(1) மார்கரேசியஸ் கல்லூரி, நாசரத் :—

22—7—1972 அன்று கல்லூரி மன்றம் அமைக்கவேண்டுமென்று கோரி மாணவர்கள் வகுப்புகளுக்குச் செல்லவில்லை. முதல்வர் இதனை ஒப்புக்கொண்டதால் மாணவர்கள் 24—7—1972 லிருந்து மீண்டும் வகுப்புக்குச் சென்றனர்.

(2) கே. ஜி. எஸ். கலைக் கல்லூரி, ஸ்ரீ வைகுண்டம் :—

4—8—1972 அன்று மாணவர்கள் கல்லூரியைப் பல்கலைக்கழகத் தேர்வு இடமாக்கவும், பல்கலைக் கழகத்தில் மாணவர்கள் அங்கம் வகித்தல் போன்ற கோரிக்கைகளுக்காகவும் முன்னறிவிப்பின்றி வகுப்புகளுக்குச் செல்லாமல் நின்றுவிட்டதால் கல்லூரியும், விடுதியும் மூடப்பட்டன.

(3) ம. தி. தா. இந்துக் கல்லூரி, பேட்டை :—

3—8—1972 அன்று மாணவர்கள் தண்ணீர், பேருந்து போன்ற வசதிகள் கோரி வகுப்புகளுக்கு வராமல் நின்றுவிட்டனர். ஆகவே முதல்வர் கல்லூரிக்கு 8—8—1972 வரை விடுமுறை என்று அறிவித்தார்.

(4) தூய ஜான் கல்லூரி, பாளையங்கோட்டை :—

7—8—1972 அன்று விடுதியில் உள்ள மாணவர்கள் இடையே சச்சரவு ஏற்பட்டது. செய்தி அறிந்து, காவல் துறையினர் அங்கு விரைந்து சென்று, மேற்படி சச்சரவைத் தவிர்த்தனர். 8—8—1972 அன்று மாணவர்கள் வகுப்புகளுக்குச் சென்றனர்.

3. மதுரை மாவட்டம் :—

(1) தியாகராசர் கல்லூரி மதுரை :—

12—8—1972 அன்று நடைபெறப் போவதாக இருந்த கல்லூரி மன்றத் தேர்வை ஒட்டி, மாணவர்களில் இரு சாராரிடையே 8—8—1972 அன்று சச்சரவு ஏற்பட்டது. இதுபற்றி முதல்வர் விசாரணை நடத்தி வருகிறார்.

(2) மதுரைக் கல்லூரி, மதுரை :—

விடுதியைச் சார்ந்த தலைமை சமையற்காரர் உணவுப் பொருட்களை விளைவித்ததால் அவரை வேலையிலிருந்து நீக்கம் செய்யவேண்டும் என்று மாணவர்கள் கோரினர். 7—8—1972லிருந்து முதல்வர் கல்லூரியை மூடிவிட்டார். 17—8—1972-ல் இருந்து வகுப்புகள் படிப்படியாக ஆரம்பிக்கப்பட்டு வருகின்றன.

2. சென்னையிலுள்ள கல்லூரிகளின் மாணவர்கள் தங்களது குறைபாடுகளை எடுத்துச் சொல்வதற்கு அரசு சில விதிமுறைகளை, கீழ்க்கண்டவாறு தொகுத்துள்ளது :—

(1) பொதுவான குறைபாடுகள் பற்றி மாணவர்கள் தங்களது கல்லூரி அதிகாரிகளிடம் வேண்டுகோள் விடுக்கவேண்டும். அதன் பிறகு கல்லூரிக் கல்வி இயக்குநருக்கும், பிறகு அரசிற்கும் விண்ணப்பிக்க வேண்டிய தேவையிருந்தால் கல்வித்துறை செயலாளரையும் சந்திக்கவேண்டும். இதன் பிறகும் தேவை இருப்பின் கல்வி அமைச்சரை சந்திக்கக் கோரலாம்.

(2) ஒவ்வொரு கல்லூரி மாணவர்களின் பிரதிநிதிகளையும் அழைத்து கல்லூரிக் கல்வி இயக்குநர் திங்களொருமுறை விவாதித்து, அவர்களது வேண்டுகோள்களை எடுத்துச் சொல்ல ஒரு சந்தர்ப்பம் அளிக்கவேண்டும். இக்கூட்டங்களுக்கு கல்லூரி முதல்வர்களும், வேண்டுகோள் சம்பந்தப்பட்ட துறைத் தலைவர்களும் (உதாரணமாக பேருந்து வசதி பற்றிய வேண்டுகோள்களுக்கு அரசு போக்குவரத்து இயக்குநர்) அழைக்கப்படவேண்டும்.

(3) மாணவர்களும், அதிகாரிகளும் ஒரு சுமுகமான சூழ்நிலையில் கலந்து பேசுவதினால் எல்லா சிக்கல்களுக்கும் தீர்வு கண்டுவிடலாம் என்று அரசு முழு நம்பிக்கையோடு உள்ளது.

6. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(1) தமிழ்நாடு, 1972-ம் ஆண்டு உழவுத் தொழிலாளர் நியாயக் கூலி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 34/1972)

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, "சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1972 ஆம் ஆண்டு உழவுத் தொழிலாளர் நியாயக் கூலி (திருத்த) சட்ட முன்வடிவு @ (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 34/1972) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

கிழக்குத் தஞ்சாவூரில் உழவுத் தொழிலாளர் பிரச்சினைகளைப் பற்றி விசாரணை செய்வதற்காக 1968 டிசம்பரில் மாநில அரசால் நியமிக்கப்பட்ட விசாரணைக் குழுவின் பரிவுரைக்கிணங்க, தமிழ்நாடு 1969 ஆம் ஆண்டு உழவுத் தொழிலாளர் நியாய ஊதியங்கள் அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் 4/1969) சாற்றப்பட்டது. பின்னர் இதற்குப் பதிலாக, தமிழ்நாடு 1969-ஆம் ஆண்டு உழவுத் தொழிலாளர் நியாய ஊதியங்கள் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 10/1969) இயற்றப்பட்டது. நடவுக்கான காலத்திலும், அறுவடை காலத்திலும் எல்லாவகையான வேலைகளுக்கும் தாம் வேலைக்கு வைத்துள்ள உழவுத் தொழிலாளருக்கு நில உரிமையாளர் ஒவ்வொருவரும் இச்சட்டத்தில் குறிப்பிட்டுள்ள நியாய ஊதியங்களைக் கொடுப்பதற்கு இச்சட்டம் வகை செய்கிறது. நியாய ஊதியங்கள் கொடுப்பதை உறுதியாகச் செயற்படுத்துவதற்கும் இச்சட்டம் வகை செய்கிறது. இச்சட்டம், கிழக்குத் தஞ்சாவூர் மாவட்டத்தின் ஆறு வட்டங்களில் 1969 ஆகஸ்டு 5-ஆம் நாளில் செயலுக்கு வந்துவிட்டதாகக் கருதப்பட வேண்டும். இது 1972 ஆகஸ்டு 4-ஆம் நாள் இறுதிவரை செயலில் இருந்திருக்கவேண்டும்.

@ 382-383 ஆம் பக்கங்களில் இணைப்பு V ஆக அச்சிடப்பட்டுள்ளது.